


அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வழிகாட்டலில்
அறிவாடல் ஒருங்கிணைப்புக்குழு நடாத்தும்



# அனைத்துலக
# அறிவாடல் போட்டி

**அகவை 8 முதல் 18 வரை**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதிநாள் 30.09.2023**

**போட்டி நாள் 07.10.2023**

தமிழர்களின் மொழி, இன வரலாற்றையும் பண்பாட்டையும் விழுமியங்களையும் உரிமைகளையும் எமது தலைமுறையினர் இலகுவாக அறிந்து கொள்வதை நோக்காகக் கொண்டு வினா - விடை வடிவில் அறிவாடல் என்னும் இந்தப்போட்டி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அகவை அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டியானது 8 - 18 அகவை வரை உள்ள மாணவர்களுக்கிடையில் 11 பிரிவுகளாக நடாத்தப்படும்

அகவை 8, 9, 10 ற்கு 25 கேள்விகள், அகவை 11, 12,13 ற்கு 30 கேள்விகள், அகவை 14, 15, 16 ற்கு 35 கேள்விகள், அகவை 17,18 ற்கு 40 கேள்விகள் எனும் அடிப்படையில் வினாக்கள் கொடுக்கப்படும். ஒவ்வொரு அகவையினருக்குமான வினாக்கொத்து உங்கள் கல்விக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டும்

இப் போட்டியில் யேர்மனி, கனடா, நோர்வே, டென்மார்க், சுவீடன், நெதர்லாந்து, இத்தாலி, சுவிற்சலாந்து, பிரித்தானியா, பின்லாந்து, பெல்சியம் போன்ற நாடுகளில் இருந்து போட்டியாளர்கள் பங்குபெறவுள்ளனர்

நாடளாவிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் அனைத்துலகப் போட்டிகளில் பங்குகொள்வார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் ஒரே புள்ளியை பெற்றிருக்கும் நிலையில் அவர்கள் விடையளிக்க எடுத்துக் கொண்ட நேரத்தைக் கருத்திற்கொண்டு வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் கல்விக் கழகங்களை தொடர்பு கொள்ளவும்

இப் போட்டியில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.



மெய்நிகர் ஊடாக Google form வடிவில் போட்டிகள் நடைபெறும்.
வெற்றி பெறும் மாணவர்களுக்கு வெற்றிப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.
அத்துடன் அனைத்துலக போட்டியில் போட்டியிடும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

அனைத்துலக அறிவாடல் ஒருங்கிணைப்புக் குழு
arivaadalcoordinat@gmail.com
00 45 60 83 76 64